**நூல்** :- **கிராமத்து வாசம்** (குழந்தைப் பாடல்கள்)

**தொகுப்பாசிரியர்** :- சு. குணேஸ்வரன்

**பதிப்பு** :- 13-12-2008

**மீள் அச்சு** :- 25.12.2008.

**வெளியீட்டாளர்** :- திரு திருமதி சாந்தரூபன் ஞானகலை

**அச்சிட்டோர்** :- மதுரன் கிராபிக்ஸ், அல்வாய்.

**முன் அட்டை** :- இளம் ஓவியர் வாசனின் கலையாக்க
வழிகாட்டலில் மூன்றாவது கண் உள்ளூர்
அறிவு திறன் செயற்பாட்டுக் குழுவினரால்
உருவாக்கப்பட்ட 'வெருட்டி'களில் இருந்து
'விரும்பி'கள்

**நன்றி** :- www. Thirdeye.com



உழைப்பால் உயர்ந்த
எங்கள் ஐயாவே!

உன்னவளும் உன்னோடு
கூட உழைத்தாள்
புட்டவித்து, கறிசமைத்து
மூடற் பெட்டிக்குள் வைத்து
கேணித்தோட்ட வரம்பால்
நடந்து வந்தாள்
அப்போதும்...
நீ உன் தோட்டத்துள் நின்றாய்!

திரைகடல் ஓடித்
திரவியம் தேடிய மைந்தரால்
நீ நன்றாய் இருந்தாய்
பாதிவழியில் பறிகொடுத்த பொருளைப்போல்...
நாம் உன்னைப் பறிகொடுத்தோமே!

நீளும் உன் நினைவுடன்...
இந்நூல் உனக்கு சமர்ப்பணம்.

# உள்ளே


i. தொகுப்பாசிரியரின் எண்ணத்திலிருந்து...
ii. வெளியீட்டாளரின் எண்ணத்திலிருந்து...

| | | |
|---|---|---|
| 1. | அம்மாவின் அன்பு | – க. வேந்தனார் |
| 2. | சாப்பிட வா | – சாரணா கய்யூம் |
| 3. | அம்மா அப்பா பாவம் | – ச. வே பஞ்சாட்சரம் |
| 4. | தாத்தா | – குறமகள் |
| 5. | பாட்டி அழுகிறாள் | – கனக செந்திநாதன் |
| 6. | கோழிக்குஞ்சு | – ந. கிருஷ்ணராசா |
| 7. | பட்டணம் போன பூனை | – க. சச்சிதானந்தன் |
| 8. | பச்சைக்கிளி | – ஆடலிறை |
| 9. | பட்டாம் பூச்சி | – மனோ பற்குணம் |
| 10. | பலூன் | – க. வீரகத்தி |
| 11. | பட்டம் | – வேலு |
| 12. | தவளைக் கூத்து | – திமிலைத்துமிலன் |
| 13. | ஆமையாரின் வீடு | – சேந்தன் |
| 14. | புக்கு புக்கு | – க.சச்சிதானந்தன் |
| 15. | ஏண்டி குட்டி | – ஈழத்து நாட்டார் பாடல் |
| 16. | சிங்கிலி நோனா | – ஈழத்து நாட்டார் பாடல் |
| 17. | கடலை வாங்குவோம் | – ஆடலிறை |
| 18. | எலியும் முயலும் செய்த தோட்டம் | – க.சச்சிதானந்தன் |
| 19. | கத்தரி வெருளி | – சோமசுந்தரப் புலவர் |
| 20. | தில்லை நடனம் | – மு. பொன்னம்பலம் |
| 21. | ஒன்று பட்டால் | – மு. பொன்னம்பலம் |




# தொகுப்பாசிரியர் எண்ணத்திலிருந்து

கிராமத்து வாசம் எனும் மகுடத்தில் அமைந்துள்ள குழந்தைப் பாடல்கள் அமரர் ம. சின்னத்தம்பி அவர்களின் நினைவு வெளியீடாக அவரது குடும்பத்தினரின் வேண்டுகோளுக்கு ஏற்ப தொகுக்கப்பட்டு நூலாக வெளிவருகின்றது.

ஈழத்தில் முதல்முதலாக 1935 இல் வடமாநில கல்வி அதிகாரியாக இருந்த க. அருள்நந்தி அவர்களின் பெருமுயற்சியில் குழந்தைப்பாடல்கள் தொகுக்கப்பட்டு 'பிள்ளைப்பாட்டு' என்ற தொகுதியாக வெளிவந்தது. இன்றுவரையும் குழந்தை இலக்கியத்தின்பால் ஆர்வமும் ஈடுபாடும் கொண்டவர்களால் இவ்வாறான பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படுகின்றன.

மிகக் குறுகிய கால இடைவெளியில் இம்முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளதால் குறிப்பிட்ட சில பாடல்களே சேர்க்கப்பட்டுள்ளன. தொகுப்பின்போது பாடல்களின் ஓசைநயமும், எளிமையும், சிறுவர்களுக்கான மகிழ்ச்சியுமே கருத்திற் கொள்ளப்பட்டன. இது ஒரு சிறு முயற்சிதான். இதுபோன்ற பயனுள்ள பணிகள் தொடரவேண்டும்.

பாடல்களை எழுதியிருந்த கவிஞர்களுக்கும் அவற்றை வெளியிட்ட வெளியீட்டாளர்களுக்கும் முன் அட்டைக்கான படத்தினைப் பெற உதவிய 'மூன்றாவது கண்' இணைய இதழின் ஆசிரியர் அவர்களுக்கும் அழகாக அச்சிட்ட மதுரன் கிராபிக்ஸ் நிறுவனத்தினருக்கும் எம் நன்றி.

'கிராமத்து வாசம்' பிள்ளைகளின் மகிழ்ச்சிக்கும் அவர்களின் கல்வி வளர்ச்சிக்கும் பயன்படும் என்று நம்புகிறேன்.


'தினைப்புனம்'
மயிலிட்டி,
அல்வாய்.
10.12.2008

சு. குணேஸ்வரன்
மின்னஞ்சல் :- mskwaran@yahoo.com

## வெளியீட்டாளர் எண்ணத்திலிருந்து

எமது குடும்ப விளக்கு ஐயா ம. சின்னத்தம்பி அவர்களின் மறைவின் நினைவாக இந்நூலை வெளியிடுகின்றோம். அன்னாரின் நினைவினை முன்னிறுத்தும் வகையில் மேற்கொள்ளப்படும் இத்தொகுப்பு பாடசாலைப் பிள்ளைகளுக்குப் பயன்படும் என்று நினைக்கின்றோம்.

நாம் கேட்டவுடன் குறுகிய சில நாட்களில் இத்தொகுப்பு வேலையினைப் பெறுப்பேற்றுச் செய்து தந்த ஆசிரியர் திரு சு. குணேஸ்வரன் (யா/அம்பன் அ. மி. த. க. பாடசாலை) அவர்களுக்கும் கவிதைகளை எழுதியிருந்த கவிஞர்களுக்கும் எம் உள்ளம் நிறைந்த நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளோம். மிக அழகாக அச்சிட்ட மதுரன் கிராபிக்ஸ் சு. மகேஸ்வரன் அவர்களுக்கும் இவ்வாறான தொகுப்பினைச் செய்ய வேண்டும் என ஊக்கப்படுத்திய திரு வே. பரமானந்தம் அவர்களுக்கும் இம்முயற்சியில் பங்கெடுத்த அனைவருக்கும் வெளியீட்டாளர் என்ற வகையில் எம் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

பாடசாலைப் பிள்ளைகள் மட்டுமல்லாமல் பெரியவர்களும் இதன் அருமை பெருமைகளை உணர்ந்து கொள்வார்கள் என்று எண்ணுகிறோம்.

'இராசமணி இல்லம்', திரு திருமதி சாந்தருபன் ஞானகலை
கெருடாவில் தெற்கு,
தொண்டைமனாறு.
10.12.2008





## அம்மாவின் அன்பு



காலைத் தூக்கிக் கண்ணில் ஒற்றிக்
கட்டிக் கொஞ்சும் அம்மா
பாலைக் காய்ச்சிச் சீனி போட்டுப்
பருகத் தந்த அம்மா

புழுதி துடைத்து நீரும் ஆட்டிப்
பூவுஞ் சூட்டும் அம்மா
அழுது விழுந்த போதும் என்னை
அணைத்துத் தாங்கும் அம்மா

அள்ளிப் பொருளைக் கொட்டிச் சிந்தி
அழிவு செய்த போதும்
பிள்ளைக் குணத்தில் செய்தான் என்று
பொறுத்துக் கொள்ளும் அம்மா

பள்ளிக் கூடம் விட்ட நேரம்
பாதி வழிக்கு வந்து
துள்ளிக் குதிக்கும் என்னைத் தூக்கி
தோளிற் போடும் அம்மா



பாப்பா மலர்ப் பாட்டை நானும்
பாடி ஆடும் போது
வாப்பா இங்கே வாடா என்று
வாரித் தூக்கும் அம்மா.

